**சுருக்கம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – கன்னியாகுமரி மாவட்டத்தில் பயனிலுள்ள களியக்காவிளை பேரூராட்சி, மெதுக்கும்மல் ஊராட்சி, 22 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கொல்லங்கோடு பேரூராட்சி, ஏழுதேசம் பேரூராட்சி, 27 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகியவற்றிற்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் மற்றும் மேல்புரம் ஒன்றியத்திலுள்ள 79 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் – 8.10.2009 அன்று நடைபெற்ற அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுக் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டது – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ2) துறை</u>**

**அரசாணை (நிலை) எண். 211** **நாள் 5.11. 2009**

**ஐப்பசி 19, திருவள்ளுவர் ஆண்டு 2040**

**படிக்கப்பட்டது**

1. 8.10.2009 அன்று நடைபெற்ற 21வது அதிகாரம் அளிக்கப் பெற்ற குழு கூட்ட நடவடிக்கை குறிப்பு.
2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடித எண். கோ. 57216/ உபொ5/ திமேபி/2009/ நாள் 22.10.2009.

---------

**<u>ஆணை</u> :**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், கன்னியாகுமரி மாவட்டத்தில் பயனிலுள்ள களியக்காவிளை பேரூராட்சி, மெதுக்கும்மல் ஊராட்சி, 22 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கொல்லங்கோடு பேரூராட்சி, ஏழுதேசம் பேரூராட்சி, 27 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகிய தற்போது செயற்படுத்தப்படும் கூட்டுக்குடிநீர்த்திட்டங்களுக்காக சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் மேல்புரம் ஒன்றியத்திலுள்ள 79 குடியிருப்புகளுக்காக புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தல் ஆகியவற்றை நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் வழங்கக் கோரும் செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்கூறிய திட்டங்களிலுள்ள நீரின் தரம், ஆற்றுப் படுகையில் தொடர்ந்து மணல் எடுப்பதால், பாதிப்படைந்துள்ளது என்றும் மேலும் நிலத்தடி நீரின் தரத்தை ஆராய்ந்ததில் குடிநீரில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இரும்புத்தாது, கலங்கல் தன்மை மற்றும் குளோரைடு உள்ளதாக தெரியவந்துள்ளது என்றும் எனவே முழு அளவிலான நீர் சுத்தகரிப்பு நிலையம் தேவை என

முடிவு செய்து சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திட்டம் ஒன்றை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வடிவமைத்துள்ளது என்றும் மேற்படி திட்டத்தினால் பயன்பெறும் மக்கள்தொகை மற்றும் அவர்களின் குடிநீர் தேவையை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| விபரம் | மக்கட் தொகை | | | குடிநீர் தேவை (10 விழுக்காடு குழாய் இழப்பினை சேர்த்து) (லிட்டரில்) | | 23 மணி நேர நீர் உந்தலின்படி நீர் கொடு திறன் ( லி / நி ) | |
|---|---|---|---|---|---|---|---|
| | அடிப் படை ஆண்டு (2010) | இடைக் காலம் (2025) | உச்ச காலம் (2040) | இடைக் காலம் (2025) | ஊச்ச காலம் (2040) | இடைக் காலம் (2025) | உச்ச காலம் (2040) |
| களியக்கா விளை கூட்டுக் குடிநீர் திட்டம் | 48396 | 53740 | 59075 | 2757259 | 3038201 | 1997 | 2197 |
| கொல்லங் கோடு கூட்டுக் குடிநீர் திட்டம் | 100445 | 115936 | 133255 | 6729854 | 7796645 | 4875 | 5646 |
| வழியோரக் குடியிருப்புகள் | 40072 | 44079 | 48088 | 1939520 | 2115867 | 1407 | 1533 |
| மொத்தம் | 188913 | 213755 | 240418 | 11426633 | 12950713 | 8279 | 9376 |
| 5 விழுக்காடு சுத்திகரிப்பு இழப்பு | | | | 571332 | 647536 | 414 | 470 |
| இயல்பு நீரின் மொத்த தேவை | | | | 1,19,97,965 | 1,35,98,254 | 8693 | 9846 |

3. இத்திட்டத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய குழித்துறையார் ஆற்றில் செங்கிலாகத்தில் 1 எண்ணம் நீர் எடுப்புக் கிணறு அமைத்து, சுத்திகரிப்பு செய்து, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் இத்திட்டத்தினை குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த (80 விழுக்காடு அரசு மான்யம் மறறும் 20 விழுக்காடு பொது மக்கள்/ உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு) கொல்லங்கோடு, ஏழுதேசம் மற்றும் களியக்காவிளை பேரூராட்சிகள், கீழ்காணும் தனது தீர்மான எண்களில் 20 விழுக்காடு பங்களிப்பு தொகையினை செலுத்த தீர்மானித்துள்ளது என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| **வ. எண்** | **பேரூராட்சி** | **தீர்மான எண்மற்றும் நாள்** |
|---|---|---|
| 1 | கொல்லங்கோடு | தீர்மான எண்.784 நாள்.15.12.2008 |
| 2 | ஏழுதேசம் | தீர்மான எண்.190 நாள் .8.12.2008 |
| 3 | களியக்காவிளை | தீர்மான எண்.716 நாள்13.12.2008 |

வழியோர குடியிருப்புகளுக்கான அமைப்புச் செலவுக்கு குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் 100 விழுக்காடு அரசின் மான்யம் பெறப்படவுள்ளது என்றும், மேற்கண்ட திட்டத்திற்கு 23.6.2008 அன்று நடைபெற்ற மாநில அளவிலான தொழில் நுட்ப குழு கூட்டடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றும் இத்திட்டம் முடிவுற்றவுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தினை பராமரிக்கும் என்றும் 02.03.09அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் வைக்கப்பட்டு வாரியம், தனது தீர்மானம் எண் 2.3 நாள் 02.03.09ல் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்க அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவிற்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. அதிகாரம் அளிக்கப் பெற்ற குழு 08.10.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வாரியப் பரிந்துரையை ஏற்று தனது தீர்மானம் எண். 3, நாள் 08.10.2009 ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது பயனில் உள்ள களியக்காவிளை பேரூராட்சி, மெதுக்கும்மல் ஊராட்சி, 22 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கொல்லங்கோடு பேரூராட்சி, ஏழுதேசம் பேரூராட்சி, 27 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய தற்போது செயல்பட்டு வரும் திட்டங்களுக்கு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் மேல்புரம் ஒன்றியத்திலுள்ள 79 குடியிருப்புகளுக்காக புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு அமைப்புச் செலவு ரூ.1670 இலட்சம் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.124 இலட்சங்கள் எனவும், தனி நபர் செலவு ரூ.884/— எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.7.05 எனவும் கணக்கிட்டு இத்திட்டத்தினை குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ், கீழ்கண்ட நிதி அடிப்படையில் செயல்படுத்த, நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பயனாளிகள் பேரூராட்சி / வழியோரக் குடியிருப்புகள் | ஜீகிதாச்சார திட்ட அமைப்புச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பகுப்பு விபரம் (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | 80 விழுக்காடு அரசு மான்யம் குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் | 20 விழுக்காடு பொதுமக்கள் / உள்ளாடசி அமைப்பின் பங்களிப்பு | 100 விழுக்காடு அரசு மான்யம். |
| 1. | கொல்லங்கோடு பேரூராட்சி | 498.00 | 398.40 | 99.60 | - |
| 2. | ஏழுதேசம் பேரூராட்சி | 222.00 | 177.60 | 44.40 | - |
| 3. | களியக்காவிளை பேரூராட்சி | 185.00 | 148.00 | 37.00 | - |
| 4. | 79 வழியோரக் குடியிருப்புகள் | 765.00 | - | - | 765.00 |
| | மொத்தம் | 1670.00 | 724.00 | 181.00 | 765.00 |

இதனடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது பயனில் உள்ள களியக்காவிளை பேரூராட்சி, மெதுக்கும்மல் ஊராட்சி, 22 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கொல்லங்கோடு பேரூராட்சி, ஏழுதேசம் பேரூராட்சி, 27 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காக சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மேல்புரம் ஒன்றியத்திலுள்ள 79 குடியிருப்புகளுக்கான புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகியவற்றிற்கு அமைப்புச் செலவு ரூ.1670.00 இலட்சங்கள் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.124.00 இலட்சங்கள் எனவும், தனி நபர் செலவு ரூ.884/— எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர்

செலவு ரூ.7.05 எனவும் கணக்கிட்டு இத்திட்டத்தினை குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் நிதிப்பகுப்பு அடிப்படையில் செயல்படுத்த, நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ, எண் | பயனாளிகள் பேரூராட்சி / வழியோரக் குடியிருப்புகள் | விகிதாச்சார திட்ட அமைப்பு செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பகுப்பு விபரம் (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | 80 விழுக்காடு அரசு மான்ய குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் | 20 விழுக்காடு பொதுமக்கள் / உள்ளாடசி அமைப்பின் பங்களிப்பு | 100 விழுக்காடு அரசு மான்யம். |
| 1. | கொல்லங் கோடு பேரூராட்சி | 498.00 | 398.40 | 99.60 | - |
| 2. | ஏழுதேசம் பேரூராட்சி | 222.00 | 177.60 | 44.40 | - |
| 3. | களியக்கா விளை பேரூராட்சி | 185.00 | 148.00 | 37.00 | - |
| 4. | 79 வழியோரக் குடியிருப்புகள் | 765.00 | - | - | 765.00 |
| | மொத்தம் | 1670.00 | 724.00 | 181.00 | 765.00 |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை 5
மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி.
சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் (பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி ஆணையர் மூலமாக)
நகல் :
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9
நிதித் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை
நிதி ந.நி (ம) கு.வ.(அநமு2) குவ2/குவ3/குவ4/, வ.செ. துறை, சென்னை 9
இகோ/உநகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**